ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**பராபவ ஆண்டு வைகாசி திங்கள்**
**வைகாசி பூச விழா குரு பூஜை விழா**
**இதற்குண்டான ஆசி விளக்கம்**
**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்க நூல்**

21.05.2026

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரக்குடில் படைத்து இந்த உலகோர்க்கு
ஓங்காரன் உயர் புகழை நிலைநாட்ட
உலகோரெல்லாம் ஓங்கார ஞானவழி வர வேண்டும்

2. வரவேண்டி அரங்கன் யானும்
பிரணவக் குடில் படைத்து ஆக்கமாய்
சரவணஜோதி கலந்து தேக்கமின்றி
என் சீடர் பெருமக்களெல்லாம்

3. தெளிவு ஞானம் பெற
தெளிவு ஞானதிடம் பெற்று இனிதே
இனிதே அரங்கன் என் வழி வரவே
இவ்வாறு ஞானிகள் பூஜை விழா நடத்திவர

4. இன்று அரங்கன் எந்தனுக்குண்டான
குரு பூஜை விழாவாம் பராபவ
வைகாசி பூச விழா
இந்த நன்னாளில் அருளாசி விளக்கத்தை

5. அன்பர்கட்காய் அரங்கன் யான்
தரவருகின்றேன் ஆக்கமுடன்
உலகோரும் என் சீடர் பெருமக்களும்
அற்புதமாய் எந்தனுக்குண்டான

6. குரு பூஜை விழாவை சிறப்பான
விழாவாக இனிதே பிரணவக்குடிலில்
இன்று விழா எடுத்து எந்தனோடு
ஞானியர் பெருமக்களெல்லாம்

7. வந்து கலந்து மகிழும்படி
உயர்வான அன்னதானத்தையும்
உயர் பூஜையும் செய்து
ஆக்கமுடன் குடிலின் நிர்வாகமும்

8. தொண்டர் பெருமக்களும் சமையல்பணி
மாந்தர்களிலிருந்து அனைவருமே
சிறப்பான தொண்டாற்ற
அரங்கனும் மகிழ்ந்து இன்று ஆசிதனை அருளுகின்றேன்

9. ஆக்கமுடன் நிர்வாகம் சிறக்கவும்
தொண்டர் பெருமக்கள் மகிழ்ச்சியும்
நிறைவும்பட தொண்டாற்றவும்
சமையல் பணியிலிருந்து வசூல் பணியென

10. அனைத்து தொண்டர்களுமே
ஆக்கமுடன் செயல்படவும்
அரங்கன் யான் இன்று அவரவர்க்கும்
வரம் தந்துள்ளேன் உள்ளபடி எனைநாடி

11. வந்து உயர்வாய் சன்மார்க்க வழி
இனி தொடர்வேன் என சரணாகதி
கொண்டு வந்த அன்பர்கட்கும்
இந்த குருபூஜை விழா

12. கலந்து கொண்ட யாவர்க்கும்
அரங்கன் யான் இன்று
வரம் தந்துள்ளேன் உள்ளபடி
ஆறுமுகப்பெருமானோடு என் உயர்வான

13. ஆசி அனுகூலம் இன்று யாவர்க்கும் தந்துள்ளேன்
இதனொடு இவ்விழாவில் அருளமுதின்
பங்கே அளவில்லாதது ஆற்றல்பட
அரங்கன் யான் சக்தியூட்டி

14. இன்று அமுதிலும் வரமும்
பலமும் தந்துள்ளேன் இவை அருளமுது
உண்ட அன்பர்களெல்லாம்
வருகின்ற காலம் பிணி சோடை

15. ஏதுமின்றி ஆரோக்கியம் படவும்
ஞானத்துக்கு உண்டான சூட்சும விஷயங்களும்
தெளிவு திடம் கூடி ஞானிகளாகவே
ஆக்கம் பெற அரங்கன்

16. என் பரிபூரண ஆசி உண்டு
ஆசி தந்தேன் இன்று நடந்த

விழா சிறப்பு அன்பர்கள் கூட்டமோடு
கூட்டத்துள் கூட்டமாய் ஞானியர்களும் கலந்து வந்து

17. இந்த விழாவை சிறப்பித்துள்ளனர்
உள்ளபடி அரங்கனும் முழுமைபட
ஜோதியாய் பிரகாச சுடராய்
ஆற்றலாய் இன்று ஆசி வரம் தந்துள்ளேன்

18. உள்ளபடி இன்று குருபூஜை விழா
ஆறுமுகப்பெருமான் மகிழும் வண்ணம்
நடந்துள்ளது இதனொடு அனைத்து
மகா சக்திகளும் குடிலுக்கு

19. இன்று வரம் தந்துள்ளனர்
உள்ளபடி குடிலின் தொண்டுகள்
அத்தனையும் இனி சிறக்கும்
தர்மமும் தடைபடா வண்ணம்

20. தர்மத்துக்கு தாராள தனப்புழக்கம் கூடி
தொண்டர்கள் இன்னும் இளைஞர் படைகளெல்லாம்
சரணாகதி கொண்டு வந்து
புதிய தலைமுறைகள் இன்னும் விரிவாக

21. சன்மார்க்க வழியில் உயர் தொண்டாற்றும்
வண்ணம் மாற்றங்களும் அரங்கன் யான்
இந்த குரு பூஜை விழாவிலிருந்து நடத்துவேன்
இன்னும் பல தொண்டர் பெருமக்கள்

22. என்பால் பரிபூரண சரணாகதி கொண்டு
சேவையாற்றும் வண்ணம் மாற்றத்தை நிகழ்த்துவேன்
உலகமெங்கும் மாற்றங்கள் நடக்க அரங்கன்
என் ஆசியும் அனுகூலமும் உண்டு உண்டு

23. ஓங்காரக்குடிலின் தர்ம சேவைக்கு
நிர்வாகத்திற்கும் தாராள தனப்புழக்கத்துக்கும்
உயர் தொண்டாற்றுகின்ற அன்பர்கட்கெல்லாம்
மனம் நிறையும்படி அவர்கட்கு உண்டான

24. செலவு வகையும் ஆதாயம் செய்து
அரங்கன் யான் அற்புதம் நிகழ்த்துவேன்
இவ்விழா சிறப்புடன் நடந்தேறியது
இவ்விழாவில் ஞானியர்களெல்லாம்

25. கலந்து அருளாசி வழங்கியுள்ளனர்
உள்ளபடி இவ்விழாவில் ஆறுமுகனே
தலைமையேற்று சூட்சுமமாய் நடத்தியுள்ளார்
இந்த விழாவில் வந்து சென்றவர்களுள்

26. மக்களுள் மக்களாய் எண்ணிலா கோடி
ஞானியர்கள் இணைந்து வந்துள்ளனர்
இந்த அற்புதத்தை பெற
ஓங்காரக்குடில் நிர்வகிக்கும் அன்பர்கள்

27. மாதவம் செய்துள்ளனர் உள்ளபடி
அரங்கன் என் தவம் உயர்வாய்
இரண்டாம் ஆண்டு குரு பூஜை விழாவில்
பூர்த்தி கண்டுள்ளது மேலும் இவ்விழாவில்

28. உயர் மக்கள் வருகை பெருகும்
இதற்கு அனுகூலமாகவே அற்புதம் நடந்துள்ளது
அரங்கன் யான் அருளிய
அருளாசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி